# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

**<u>அசல் வழக்கு எண்.428/2010</u>**

நாள்: 16.10.2023

பெயர்: அன்பழகன் (வா.சா.1) த/பெ:நடராஜன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>1– ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ..</u>**

1. தாவா சொத்தில் வாதியின் தந்தை பக்கிரிசாமி பிரதிவாதியின் தந்தை சின்னத்தம்பியும் சேர்ந்து கூட்டாக அனுபவம் செய்த சொத்து 1/2 சென்ட் ஆகும். மேற்படி பக்கிரிசாமியும், சின்னதம்பியும் 1/2 சென்டை ஆவண மூலமாக பாதியாக பிரித்துகொண்டார்கள். பாக அட்டவணையை பதிவு செய்தார்களா என்ற விவரம் எனக்குத் தெரியாது. வாதியின் தந்தை இறந்த பின்பு அவருக்கு கிடைத்த பாகத்தை தனது சகோதரர் மோகனுக்கு தனது பாகத்தை வாய்மொழியாக விட்டு கொடுத்து விட்டார் என்றால் சரிதான். குணசேகரினிடமிருந்து தனக்கு கிடைத்த பாகத்தை மீண்டும் வாதியின் பெயரில் தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதி கொடுத்து விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்று எனக்கு தெரியாது. நான் வாதி எனது சொந்தக்காரர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– திரு.ச.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஜெயங்கொண்டம்.